# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

# 2015 - 2016

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 8

சுட்டெண்:............................................................ நேரம்: 180 மணித்துளிகள்

www.tamiledc.com

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. உலகின் முதல்மொழி தமிழே என்று நிறுவியவர்

அ) பாவேந்தர் ஆ) பாரதியார்

இ) தேவநேயப்பாவாணர் ஈ) தொல்காப்பியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. **கொழுந்து** என்பது

அ) நன்கு வளர்ச்சியுற்ற இலையின் பருவத்தைக் குறிக்கும்.

ஆ) புதிதாகத் தோன்றிய இலையின் பருவத்தைக் குறிக்கும்.

இ) பழுத்துவிட்ட இலையின் பருவத்தைக் குறிக்கும்.

ஈ) காய்ந்துபோன இலையைக் குறிக்கும்.

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. **ஆடினான்** என்ற வினைச்சொல்லின் இடைநிலை

அ) ஆடு ஆ) இன் இ) ன் ஈ) ஆன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. குலசேகரம்வைரமுத்து என்ற இயற்பெயரைக் கொண்ட மன்னன்

அ) கயிலைவன்னியன் ஆ) பண்டாரவன்னியன்

இ) எல்லாளன் ஈ) சங்கிலியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. காட்டுமல்லிகை என்ற பாடத்தில் செருக்கொடு மலர்ந்து நிற்கும் மலர்

அ) முல்லை ஆ) காட்டுமல்லிகை

இ) சம்பங்கி ஈ) செவ்வந்தி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. செயப்படுபொருள் குன்றிய வினைமுற்று

அ) ஓடினான் ஆ) பாடினாள் இ) வரைந்தனர் ஈ) படித்தாள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. முதல் எழுத்துகள்

அ) 30 ஆ) 12 இ) 18 ஈ) 216

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. நெல்லிக்கனியின் சிறப்பை அதியர்மானுக்குக் கூறியவர்

அ) வேடர் ஆ) துறவி இ) புலவர் ஈ) ஔவையார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. சீர்த்தலைச்சாத்தனார் எழுதிய நூல்

அ) குண்டலகேசி ஆ) மணிமேகலை

இ) சிலப்பதிகாரம் ஈ) சீவகசிந்தாமணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. நாளை கலைவிழாவிற்கு வாருங்கள். இதில் இடம்பெற்றுள்ள தோன்றா எழுவாய்

அ) நாங்கள் ஆ) நீ இ) நான் ஈ) நீங்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. **கோட்டான்** என்பது

அ) வௌவால் ஆ) புறா இ) ஆந்தை ஈ) பருந்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. அறுபதாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா

அ) பொன்விழா ஆ) வைரவிழா இ) வெள்ளிவிழா ஈ) பவளவிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. 'வலம்படு வாய்வாள் ஏந்தி ……' என்ற புறநானூற்றுப் பாடலைப் பாடியவர்

அ) காளமேகம் ஆ) திருவள்ளுவர் இ) ஔவையார் ஈ) கம்பர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. எழுவாய்வேற்றுமை என அழைக்கப்படுவது

அ) ஐந்தாம் வேற்றுமை ஆ) இரண்டாம் வேற்றுமை

இ) நான்காம் வேற்றுமை ஈ) முதலாம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. கற்றான் என்ற வினைச்சொல்லின் விகுதி

அ) கல் ஆ) கற்று இ) றான் ஈ) ஆன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. "தொண்டைமானிடம் தூது செல்லத்தானே எனை அழைத்தாய்" எனக் கேட்டவர்

அ) அதியர்மான் ஆ) ஔவையார் இ) கபிலர் ஈ) பாரி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. ஆங்கிலேயரின் மூன்று பீரங்கிகளையும் பண்டாரவன்னியன் கைப்பற்றிய இடம்

அ) உடையாவூர் ஆ) முள்ளியவளை

இ) முல்லைத்தீவு ஈ) பண்டாரிக்குளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. **மலர்கள்** என்பது

அ) ஆண்பால் ஆ) பலர்பால் இ) ஒன்றன்பால் ஈ) பலவின்பால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. தமிழின் இளமைத் தன்மையைச் சுட்டும் பெயர்

அ) தீந்தமிழ் ஆ) பைந்தமிழ் இ) தேன்தமிழ் ஈ) செந்தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. நிலவைக் கண்டு மலரும் மலர்

அ) தாமரை ஆ) செவ்வந்தி இ) அல்லி ஈ) செவ்வரத்தை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. இது + ஆல் என்பதைப் புணர்த்தினால்

அ) இவற்றால் ஆ) இதுவால் இ) இதால் ஈ) இதனால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. பண்டாரவன்னியனை ஆங்கிலேயருக்குக் காட்டிக் கொடுத்தவன்

அ) கதிர்காமநாயகம் ஆ) எட்டப்பன்

இ) வன்னியத்தேவன் ஈ) வீடணன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. நாளை தேர்வு நடக்கும் என ஆசிரியர் கூறினார். இச்சொல்லியம்

அ) தனிச்சொல்லியம் ஆ) கூட்டுச்சொல்லியம்

இ) கலப்புச்சொல்லியம் ஈ) வினாச்சொல்லியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. அறிஞர்கள் கூடி எதிர்உரை செய்யும் அரங்கு

அ) பட்டிமன்றம் ஆ) ஒத்திகை

இ) அரங்கேற்றம் ஈ) முன்னுரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. போலிப் புலவர்களைக் கண்டால் அஞ்சாது இழித்துப் பாடியவர்

அ) பாரதியார் ஆ) ஔவையார் இ) புகழேந்தி ஈ) காளமேகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. எதிர்கால இடைநிலைகள்

அ) ப், வ் ஆ) ட், ற் இ) கின்று, கிறு ஈ) இன், ன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. சைவநெறி இலக்கியங்களில் ஒன்று

அ) சீறாப்புராணம் ஆ) திருவாசகம்

இ) இயேசுகாவியம் ஈ) திவ்வியபிரபந்தம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. இரண்டாம் வேற்றுமை உருபு

அ) ஆல் ஆ) கு இ) ஐ ஈ) அது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. போர்த்துக்கேயர் கட்டிய கோட்டைகளில் ஒன்று அமைந்திருந்த இடம்

அ) வெற்றிலைக்கேணி ஆ) கிளிநொச்சி

இ) மன்னார் ஈ) யாழ்ப்பாணம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30.ஒல்காப் பெரும்புகழ் எனப் பாராட்டுப் பெற்ற நூல்

அ) சிலப்பதிகாரம் ஆ) குடும்பவிளக்கு

இ) தொல்காப்பியம் ஈ) ஆத்திசூடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

புள்வேளூர் என்னும் நீர்வளம் மிக்க நாட்டைப் பூதன் என்னும் குறுநில மன்னன் ஆண்டு வந்தான். ஒருநாள் ஔவையார் பூதனைக் காணப் புள்வேளூருக்குச் சென்றார். பூதன் ஔவையாருக்கு வரகரிசிச் சோற்றுடன் கத்தரிக்காய்ச் சம்பலும் புளித்த மோரையும் உண்ணக் கொடுத்தான். அதைக் கண்டதும் ஔவையின் உள்ளம் இன்பத்தில் திளைத்தது. என்ன அன்போடு பூதன் விருந்தளித்தான் என்பதை எண்ணி மகிழ்ந்தார் ஔவையார். அவ்விருந்து பற்றி ஒரு பாடலைப் பாடினார். "வரகரிசிச் சோறும் வழுதுணங்காய் வாட்டும்" எனத் தொடங்கும் பாடல் அது. வழுது என்பது கொழுப்பு. வழுது உண்ணும் காய் அதாவது கொழுப்பை நீக்குகின்ற காய் கத்தரிக்காய். ஔவையார் முதியவர் எனவே அவருக்குப் பல நோய்கள் இருக்கலாம் என்று எண்ணினான் பூதன். அதனாலே அவரது உடல் நிலைக்கேற்ற உணவை வழங்கினான். பூதன் கொடுத்த உணவு எளிமையான உணவு எனப் பிறர் கருதினாலும் அது உடல் நலம் பேணும் சிறந்த உணவாக இருந்தது.

1. பூதன் என்னும் மன்னனைக் காணச் சென்ற புலவர் யார்?

______________________________

______________________________

2. பூதன் ஔவையாருக்குக் கொடுத்த உணவு என்ன?

______________________________

______________________________

3. கொழுப்பை நீக்குகின்ற காய் எது?

______________________________

______________________________

4. இப்பந்தியில் வந்துள்ள ஔவையாரின் பாடல் வரி எது?

______________________________

______________________________

5. பூதன் ஆண்ட நாடு எது?

______________________________

______________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. அதியர்மான் பறித்த நெல்லிக்கனியின் சிறப்பு யாது?

______________________________________________

______________________________________________

2. பண்டாரவன்னியன் கைப்பற்றிய கோட்டைகள் எவை?

______________________________________________

______________________________________________

3. காட்டுமல்லிகையைப் புகழ்ந்து பாடிய புலவர் யார்?

______________________________________________

______________________________________________

4. பத்துப் பாட்டு எட்டுத்தொகை நூல்கள் எக்கழக காலத்தில் தோன்றியவை?

______________________________________________

5. ஆய்ச்சியர் கொடுத்த மோரைப் பழித்துப் பாடியவர் யார்?

______________________________________________

______________________________________________

6. பண்டாரவன்னியனுடன் தொடர்புடைய இரண்டு ஊர்களின் பெயர்களைத் தருக.

______________________________________________

7. இந்தியத்திடம் நியாயம் கேட்டு சாகும்வரை உண்ணாநோன்பு மேற்கொண்டு உயிர்நீத்த பெண்மணி யார்?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

**4) தரப்பட்டுள்ள சொல்லைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

## மழை

| | | | | |
|---|---|---|---|---|
| நெல்லை | எமக்கு | மலரை | மழையும் | வறுமை |

முகிலும் கறுத்துத் திரண்டது

முழங்கி ____________________ பெய்தது

மலர்கள் மகிழ்ந்து சிரித்தன

மங்கையர் ____________________ப் பறித்தனர்

உழவர் உவகை கொண்டனர்

உழுது ____________________ விதைத்தனர்

பயிர்கள் செழித்து வளர்ந்தன

பாரில் ____________________ மறைந்தது

கால மழையை ____________________ த் தந்த

கதிரவனை நாம் போற்றுவோம்

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1) தரப்பட்டுள்ள வினையடிகளின் இறந்தகால வினைமுற்றுகளைத் தருக.

தேடு :- ______________________

விளையாடு :- ______________________

நீந்து :- ______________________

2) 3ஆம், 4ஆம் வேற்றுமை உருபுகள் இடம்பெறுமாறு ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

3ஆம் வேற்றுமை :-

______________________

______________________

4ஆம் வேற்றுமை :-

______________________

______________________

3) பின்வரும் வினைமுற்றுகளின் இடை நிலைகளைத் தருக.

உண்டனர் :- ______________________

பாய்கிறது :- ______________________

செல்வான் :- ______________________

4) கீழுள்ள சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

முத்தமிழ் :- ______________________

தொன்மை :- ______________________

5) பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

தோன்றாச் செயப்படுபொருள் :-

______________________________________________

______________________________________________

செயப்படுபொருள் குன்றிய வினை :-

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

முகிலனுக்கு அகவை பத்து. அவன் ஐந்தாம் வகுப்புப் படிக்கின்றான். அவனது வீட்டுக்கு அருகில் ஒரு முதியவர் வாழ்ந்தார். அவர் மிகவும் நல்லவர். முகிலன் முதியவரிடம் சென்று பாடம் கற்றான். முதியவர் முகிலனுக்கு நல்ல ஒழுக்கம் பற்றி அடிக்கடி கூறுவார். அதனால் முகிலன் நல்ல ஒழுக்கம் உள்ள சிறுவனாக வளர்ந்து வருகிறான்.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ பண்டாரவன்னியன்
- ✸ தமிழுக்குத் தந்த கனி என்ற பாடலை உமது உரைநடையில் எழுதுக.
- ✸ உமது பொழுதுபோக்கும் அதனை நீர் விரும்புவதற்கான கரணியங்களும்.

புள்ளிகள் 20